தால், வேறு பதவிகளுக்கோ, தொழில்களுக்கோ போகாமல் இருக்கக்கூடிய ஹரிஜன கிறிஸ்லவர்களுக்கும் இந்த உதவியை அளிக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்கு மத்திய சர்க்கார் உதவியை அரசியல் சட்டப்படி கேட்க முடியாத நிலைமை இருப்பினும் மாநில சர்க்காரைப் பொறுத்தவரை என்னென்ன உதவிகள் இந்த ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறதோ அவையெல்லாம் கிறிஸ்துவ ஹரிஜனங்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.

மதுவிலக்கு வழக்குகள்

* *148* **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-62-ல் மதுவிலக்கு சட்டத்தின்கீழ் பதிவான வழக்குகள் எத்தனை ?

THE HON. SRI P. KAKKAN : A Statement [a] giving the district-wise particulars of the number of cases registered under the Madras Prohibition Act, 1937, during each of the months from April 1961 to March 1962, is placed on the Table of the House. The total number of cases registered during the period is 112,929.

திரு. கரு. சீமைச்சாமி : அனுமதி வாங்கி மது அருந்துகிறவர்கள் இந்த மன்றத்திலே இருக்கிறார்களா ? அப்படியானால் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ?

MR. SPEAKER : The question is disallowed.

திரு. கேஆர். ஆர். எம். காரியமாணிக்கம் அம்பலம் : பர்மிட் வாங்கி மது அருந்தும் முறையைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு தூரம் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், குடிசை வாழ் பகுதிகளில் இருந்து இந்த மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் எத்தனை வழக்குகள் பிடிபட்டன ? நல்ல வசதியுடன் வாழக் கூடியவர்களின் பகுதியில் இருந்து எத்தனை வழக்குகள் பிடிபட்டன ?

கனம் திரு. பூ. கக்கன் : எத்தனை வழக்குகள் பிடிபட்டன என்ற தகவல் இப்போது என்னிடம் இல்லை. குடிசை வாசிகளாக இருந்தாலும் சரி மாளிகை வாசிகளாக இருந்தாலும் சரி மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

---

[a] Printed as Appendix on page 635

[6th July 1962

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in view of the fact that the number of illicit distillation cases is going up in rural parts, may I request the Government to consider the question of entrusting the judiciary with more powers in the matter of penalising the illicit distillers?

THE HON. SRI P. KAKKAN : We have given more powers.

திரு. டி. கர்ச்சா கவுடர் : மதுவிலக்கு வழக்குகள் வருடா வருடம் அதிகரித்துக்கொண்டு வருகின்றனவா? அல்லது குறைந்துகொண்டு வருகின்றனவா?

கனம் திரு. பூ. கக்கன் : அநேகமாக இப்பொழுது குறைந்து கொண்டுதான் வருகிறது.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையை கவனிக்கும்போது இவ்வாண்டு பிப்ரவரி மாதம் எல்லா மாவட்டங்களிலும் வழக்குகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததாக தெரிகிறது. அதற்கு முந்திய மாதத்தில் அதிகமாக இருந்திருக்கிறது, பிந்திய மாதத்திலும் அதிகமாக காணப்படுகிறது. தேர்தலை முன்னிட்டு அந்த சமயத்தில் வழக்குகளை கண்டுபிடிப்பது ஒத்தி வைக்கப்பட்டிருந்ததா? (பதில் இல்லை).

கருங்காட்டு அணைக்கட்டுத் திட்டம்

* 149 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி தாலுகாவில் கருங்காட்டு அணைக்கட்டு திட்டத்தினால் எத்தனை ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டுள்ளது?

THE HON. SRI P. KAKKAN : An extent of 2,192 acres will be benefited by the scheme as against 1,600 acres previously cultivated under the ayacut of 9 tanks benefited by the scheme besides extension of second crop to over 200 acres.

திரு. ஆ. துரையரசன் : இந்த அணைக்கட்டுத் திட்டத்தினால் எதிர்ப்பார்த்தளவு பயன் கிடைக்கவில்லை என்று அரசாங்கத்திற்கு புகார்கள் வந்துள்ளனவா?

கனம் திரு. பூ. கக்கன் : அப்பேர்ப்பட்ட புகார் ஒன்றும் வரவில்லை.

திரு. அ. கு. சுப்பையா : இந்த கருங்காட்டு அணை மூலம் சம்பந்தப்பட்ட ஏரியில் தண்ணீர் நிறையாமல் இருக்கிறது என்று அரசாங்கத்திற்கு விவசாயிகள் பல மகஜர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த அணையில் தண்ணீர் தேங்குவதற்கு வசதியாக வருடா